DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.185/2025
PW - 10

| | | |
|---|---|---|
| Name | : | சுப்ரமணியன் (Lw - 10) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 12.05.2026**

நான் கடைசியாக எருமப்பட்டி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 2024ம் வருடம் முதல் எருமப்பட்டி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

இவ்வழக்கில் கடந்த 15.03.2025ம் தேதி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சிவபிரகாசம் என்பவர் எருமப்பட்டி காவல்நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது ஏற்கனவே கிடைக்கப்பெற்ற வாதி சித்ரா என்பவரின் அடிதடி தகவலை பெற்று நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த வாதி சித்ராவை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.40/2025 BNS சட்ட பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3)-ன் கீழ் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சம்பவ இட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு இவ்வழக்கின் எதிரி மஞ்சுளாவை காரணம் கூறி கைது செய்து தக்கபிணையில் விடுவித்தார். பின்பு வழக்கின் தொடர் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை எனது பார்வைக்கு வைத்தார்.

நான் வழக்கினை தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 30.03.2025ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.குமரவேல் என்பவரை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட புலன் விசாரணை செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சிவபிரகாசம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது BNS சட்ட பிரிவுகள் 296(b), 118(1), 115(2), 351(3)-ன் பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் கண்ணுறு சாட்சிகள் மற்றும் மகஜர் சாட்சிகள் யாரையும் நான் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை விசாரித்தேன் மேற்படி சாட்சிகள் ஏற்கனவே புலன் விசாரணையில் கூறியதையே கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பஞ்சாயத்து பைப் அமைந்துள்ள இடமானது கலைச்செல்வன் என்பவர் வீட்டிற்கு முன்புரம் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி கலைச்செல்வன் என்பவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பஞ்சாயத்து பைப் எதிரி குடியிருக்கும் தெருவில் அமைந்துள்ளது என்றாலும் வாதி குடியிருக்கும் பகுதியில் வேறு ஒரு பஞ்சாயத்து பைப் உள்ளது என்றாலும் சரிதான்.

வாதிக்கும் எதிரிக்கும் இடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக எந்த ஒரு ஆயுதத்தையும் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். வாதிதான் முன் பகையை மனதில் வைத்துக்கொண்டு எதிரியின் தெருவிற்கு வந்து பிரச்சணை செய்து காழ்புணர்ச்சி காரணமாக பொய் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதில் சரிவர புலன் விசாரரணை செய்யாமல் எதிரி மீது இறுதி அறிக்கை பதிவு செய்தேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**